## காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் செயற்திட்டம் - 2017

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 யூலை 10 ஆந் திகதிய 5417-எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் 1 ஆம் உறுப்புரை மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் கடன்கள் மற்றும் மானியங்களிற்கான பொது நிபந்தனைகளின் 4.09(பீ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் செயற்திட்டத்தின் நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சாகவிருந்த தற்போதைய நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. காலநிலை ஆபத்தால் மக்கள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைத்தல் மற்றும் இடர்களை திறம்பட எதிர்த்து செயலாற்றுவதற்கான இயலளவை மேம்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 14,617 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 111.8 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 14,382 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 110 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 ஆகஸ்ட் 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 மே 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக்

கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 2.1 அபிப்பிராயம்

---------------------

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் செயலாற்றல்

------------------------------------

### 3.1 நிதிகளின் பயன்பாடு

-----------------------------------

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன

| மூலம் | நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் - மீளாய்வாண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் - 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 110.0 | 14,382 | 3,250 | 16.76 | 2,558.06 | 49.52 | 7,190.39 |
| இலங்கை அரசாங்கம் | 1.8 | 235 | 50 | 0.33 | 50.20 | 0.74 | 107.19 |
| **மொத்தம்** | **111.8** | **14,617** | **3,300** | **17.09** | **2,608.26** | **50.26** | **7,297.58** |

நிதியளித்தல் உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 14,382 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 110 மில்லியன் ஒதுக்கீட்டில் செயற்திட்ட செயற்பாடுகளின் 03 ஆண்டுகள் கடந்த பின்னர் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,190.39 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 49.52 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால், ரூபா 7,191.61 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 60.48 மில்லியன் மிகுதி ஒதுக்கீட்டுத் தொகையை மிகுதி 1½ வருட காலப்பகுதியின் போது பயன்படுத்தும் சாத்தியத்தன்மையானது செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்காத வரையிலும் மிகத் தொலைவானதாக இருக்கும்.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட நடவடிக்கைகள் அதிக காலநிலை மீட்சி பொருளாதாரத்தை ஸ்தாபிப்பதில் பிரதானமாக கவனம் செலுத்துவதுடன் தாழ்நில முதலீட்டுத் திட்டங்களின் அபிவிருத்தி, உட்கட்டமைப்புக் காலநிலைப் மீட்சி அதிகரிப்பு, செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் ஆதரவு மற்றும் நிகழத்தக்க அவசர பதிலளிப்பு ஆகிய 04 பிரதான கூறுகளைக் கொண்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் ஒவ்வொரு கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான பௌதீக செயன்முன்னேற்றமானது கீழே விபரிக்கப்பட்டவாறு நிபுணரின் அறிவுத்திறன் பற்றாக்குறை, பாதகமான காலநிலை நிலைமை மற்றும் பகுப்பாய்வு மற்றும் எதிர்வுகூறல் நோக்கங்களிற்குத் தேவையான தகவல்கள் காணப்படாமை என்பவற்றின் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெதுவானதாக இருந்தது.

(அ) சிரேஷ்ட சமூக பாதுகாப்பாளர்கள் மற்றும் மீள்குடியேற்ற நிபுணர், தொடர்பாடல் நிபுணர், சுற்றாடல் பாதுகாப்பு நிபுணர், மனிதவள உத்தியோகத்தர் மற்றும் துணைப் பதவியணியினரின் ஏனைய சில பதவிகள் ஆகிய பிரதான பதவிகளிற்கான பொருத்தமான நிபுணர்களின் பற்றாக்குறையுடன் செயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவு செயற்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் ஆலோசனை சேவைகளில் ஈடுபட்டுள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் ஆலோசனைப் பதவியணியினரின் பற்றாக்குறையுடன் செயற்படுகின்றதன் விளைவாக மண்சரிவு இடர்களிற்கு பாதிப்படைகின்ற கண்டி மாவட்டத்தின் 18 பாடசாலைகளில் 06 பாடசாலைகளின் சரிவுத்தள உறுதிப்படுத்தல் வேலைகள் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் ஆலோசனையாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் சரிவுத்தள உறுதிப்படுத்தல் வேலைகள் மீது ஒப்பந்ததாரர்களைப் போன்று ஆலோசனையாளர்களின் குறைவான அனுபவங்கள் காரணமாக எதிர்பார்க்கப்பட்டவாறு இது வெற்றியளித்திருக்கவில்லை.

(இ) 10 ஆற்று பள்ளத்தாக்குகளை அபிவிருத்தி செய்வதற்கான ஆலோசனை ஒப்பந்தங்கள் ''பள்ளத்தாக்கு முதலீட்டுத் திட்டம்'' கூறின் கீழ் வழங்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சானது களனி கங்கை, அத்தனகலு ஓயா, மல்வத்து ஓயா மற்றும் தேதுறு ஓயா ஆற்றுப் பள்ளத்தாக்குகளின் அபிவிருத்திக்கான ஆலாசனைகளிற்காக மாத்திரம் ஒப்பந்தங்களை வழங்குவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருந்தது. செயற்திட்ட பணிப்பாளரின் விளக்கங்களின் பிரகாரம், வளிமண்டவியல் திணைக்களம் மற்றும் ஏனைய முகவர்களினால் 40 ஆண்டுகள் மழைவீழ்ச்சி தரவுகள் மற்றும் ஏனைய தகவல்கள் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டதன் காரணமாக அதன் மீதான சாத்தியவள ஆய்வு அறிக்கைகள் தாமதங்களுடன் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ஈ) மண்சரிவுகளைத் தடுப்பதற்கும் தொடர்ச்சியான போக்குவரத்தை உறுதிப்படுத்துவதற்குமாக 12 ஒப்பந்த பொதிகளின் கீழ் தேசிய வீதிகளின் பாலங்களை புனரமைப்பதிலும் 08 ஏனைய ஒப்பந்தப் பொதிகளின் கீழ் வீதி ஓரங்களிலுள்ள சரிவுத்தளங்களின் உறுதிப்படுத்தலிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஈடுபட்டிருந்தது. கொட்டமுனை மட்டக்களப்பு - திரிகொண்டிமடு திருகோணமலை வீதி மற்றும் பேராதனை - பதுளை - செங்கலடி வீதி என்பவற்றின் பாலங்களின் புனரமைப்பு வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் இலக்குகளிற்குப் பின்னோக்கியிருந்ததுடன் கண்டி - மஹியங்கனை வீதியின் வீதியோரங்களிலுள்ள சரிவுத்தள உறுதிப்படுத்தல்களின் கீழான வேலைகளானது வீதியோரங்களிலுள்ள சரிவுத்தள உறுதிப்படுத்தலிற்காக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் போன்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிபுணர்களின் குறைவான அறிவாற்றல் காரணமாக மெதுவான செயன்முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

2018 பெப்ரவரியில் பரீட்சிப்பு அடிப்படையில் கணக்காய்வாளர்களால் களப் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கண்டி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகள் மீது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(அ) கண்டி மாவட்டத்திலுள்ள தர்மராஜா கல்லூரியின் உறுதியற்ற சரிவுத்தளங்களை சீரமைப்பதற்கு ரூபா 95.10 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் தனியார் கம்பனியொன்றிற்கு ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. ஆகையால், கல்லூரியின் கட்டிடம் மற்றும் அதிபரின் அலுவலகத்திற்கு முன்னாலுள்ள பாறையொன்று விழுவதற்கான ஆபத்துக்களை தவிர்ப்பதற்காக உயர் அழுத்த கொங்கிறீட் அடுக்கொன்றுடன் ஆணிகள் மற்றும் கம்பி வலையை பொருத்தி தனிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் கொங்கிறீட் உருவாக்கப்பட்ட குறுகிய பகுதியினுள் மனா ''MANA'' புதர்கள் வளர்ந்திருந்ததுடன் இது குறுகிய கொங்கிறீட் இடல் வேலைகள் வேண்டப்பட்ட தர நியமத்துடன் இணங்கியிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

(ஆ) கண்டியிலுள்ள தர்மராஜா கல்லூரியின் நீச்சல் தடாகப் பகுதியின் உறுதியற்ற சரிவுத்தளத்தின் மண்சரிவிற்கான பாதுகாப்பான செடியாக தேங்காய் பொச்சின் மீது Undupiyaliya'' வளர்ப்பதற்கும் கம்பி வலையிடுவதற்கும் ரூபா 1.50 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும், மஹாமாய மகளிர் பாடசாலையின் பின்புறப் பகுதியிலுள்ள உறுதியற்ற சரிவுத்தளங்களில் தேங்காய் பொச்சின் மீது ''Undupiyaliya'' ஐ வளர்ப்பதற்கும் கம்பி வலையிடுவதற்கும் ரூபா 2.22 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் ''MANA'' புதர்கள் ''Undupiyaliya'' இற்கு மேலாக வளர்க்கப்பட்டிருந்ததுடன் பாதுகாப்பான செடியாக ''Undupiyaliya'' ஐ வளர்ப்பதன் ஆக்கபூர்வமான தன்மையானது கேள்விக்குரியதாகவுள்ளது.

(இ) கண்டி மாவட்டத்திலுள்ள அரசாங்க பாடசாலைகளில் மண்சரிவு இடர்களை குறைப்பதற்கான சில நிர்மாண வேலைகள் இயற்கை அனர்த்தங்களிற்கு அறைகளை அனுமதித்தும் உரிய பாடசாலைகளின் சிறுவர்களின் கற்கைகளை தொடர்வதற்காக சிக்கல்களிற்கு முகங்கொடுத்தும் அரைவாசியில் இடைநிறுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்படுகின்றன.

(i) ஹலோலுவ நவோதய பாடசாலையின் இரண்டு மாடிக் கட்டிடம் மற்றும் நுழைவு வீதியின் மண்சரிவு இடர்களை தவிர்ப்பதற்கான மதில் சுவரை நிர்மாணிக்கும் வேலைகள் ஒப்பந்ததாரர்களின் தவறுகள் காரணமாக 2018 பெப்ரவரி 20 இல் உள்ளவாறு அரைவாசியில் இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஆகையால், எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் பயனாளிகளிற்கு நேரத்திற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ii) கண்டியிலுள்ள ஆனந்தா கல்லூரியின் புயல் நீர் வடிகாலமைப்பு முறைமையை நிர்மாணிக்கும் வேலைகள் பிரதான வீதியின் ஓரத்தில் நிர்மாணிக்கப்பட்ட மதில்சுவரிற்கான சாத்தியமான சேதங்களுடன் 2018 பெப்ரவரி 20 இல் உள்ளவாறு அரைவாசியில் கைவிடப்பட்டிருந்தது.

(ஈ) செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டங்களின் பிரகாரம், ரூபா 1,257.24 மில்லியன் பெறுமதியான 63 பெறுகை நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதியில் பூர்த்திசெய்யப்படுவதற்கு வேண்டப்பட்டிருந்த போதிலும், ரூபா 317.63 மில்லியன் பெறுமதியான 32 பெறுகை நடவடிக்கைகள் அத்திகதியிலுள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

06 செயற்திட்ட அமுல்படுத்தல் பிரிவு மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுகளிற்கான 230 பதவிகளிற்குரிய 1,117 உத்தியோகத்தர்களை கொண்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை செயற்திட்டம் கொண்டிருந்ததுடன் 132 பதவிகளிற்காக 461 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் 01 ஆண்டிற்கு மேலாக காணப்பட்டன. எவ்வாறாயினும், சுற்றாடல் பாதுகாப்பு நிபுணர், 03 செயற்திட்ட பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர்கள் ஆகியோர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் செயற்திட்ட அமுல்படுத்தல் பிரிவு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

### 3.5 செயற்திட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் தொடர்புடைய விடயங்கள்

செயற்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட நிர்வாகக் கைநூலினால் வேண்டப்பட்டவாறு, நிதி அமைச்சின் செயலாளரின் 2016 யூன் 10 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கைக்கு முரணாக செயற்திட்ட பணிப்பாளரால் நியமிக்கப்பட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் கணக்காளர், இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு என்பவற்றின் 03 சிரேஷ்ட கணக்காய்வு உத்தியோகத்தர்கள் ஆகியோரை உள்ளடக்கிய செயற்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வுக் குழுவால் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்தன. மேலும், மேற்குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களில் அதிகமானோர் செயற்திட்ட நடவடிக்கைகளின் முகாமைத்துவ தீர்மானமெடுத்தல் செயன்முறையில் ஈடுபட்டிருந்ததுடன் அதனால் செயற்திட்டச் செயற்பாடுகளின் தன்னிச்சையான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட முடியாதிருக்கும்.

(ஆ) 09 மாத காலப்பகுதிக்கான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட நடவடிக்கைகள் மீது முக்கியத்துவமான அவதானிப்புக்களை மேற்கொள்வதற்கு விபரமான புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதை உரிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்கள் சுட்டிக்காட்டியிருந்தன.

(இ) செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் வரிசை அமைச்சுச் செயலாளரிற்கு நேரடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்த போதிலும் வேண்டப்பட்ட அறிக்கைகள் செயற்திட்டப் பணிப்பாளரிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.